கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.124/2022

பி.வா.சா.– 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திரு. அருண்பாண்டியன்** | தொழில் | அகரம் கிராம நிர்வாக அலுவலர் |
| த/பெயர் | **பாண்டியன்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 17.03.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இன்று நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகலை பின்வருமாறு சமர்ப்பிக்கிறேன்.

| **வ.எண்** | **தேதி** | **ஆவணங்கள் விபரம்** | **தன்மை** |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | அகரம் கிராமம் சர்வே எண்.2222/1 ன் கிராம கணக்குகளின் நகல்கள் | சான்றிட்ட நகல் |
| நீ.ம.சா.ஆ.2 | – | மேற்படி சர்வே எண்.2222/1 ல் எத்தனை வீடுகள் உள்ளது என்பதற்கான ஸ்தல அறிக்கை | சான்றிட்ட நகல் |

**4 முதல் 9, 18 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள சர்வே எண்.2222/1 ஐ நேரில் பார்வையிட்டேனா என்றால் ஆமாம். எங்கள் கிராம கணக்குகள் படி சர்வே எண்.2222/1, தற்போது 2222/1ஏ, 1பியாக உட்பிரிவு ஆகியுள்ளது. சர்வே எண். 2222/1ஏ, 1பி ஆவணங்களின் படி பழைய பட்டாதாரர்களின் பெயர்களும் உள்ளது, அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் வாடகைதாரர்களின் விவரங்களை ஸ்தல அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். வாடகைதாரர்கள் பெயர் பட்டாவில் இல்லை. ஸ்தல அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனது நேரடி ஆய்வில் தெரிய வந்த விவரங்கள் ஆகும். வாடகைதாரர்கள் பெயரை நீ.ம.சா.2. ல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, வீட்டின் உரிமையாளர்கள், அனுபவதாரர்கள் மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். என்ன வகையான

வீடு மற்றும் எத்தனை வீடுகள் மற்றும் எவ்வளவு பழமையான வீடு என்ற விவரங்களை குறிப்பிட்டுள்ளேன். அறிக்கையின் படி விநாயகர் கோவிலும் , கிணறும் இருப்பதாக சொல்லியுள்ளேன். நீ.ம.சா.ஆ.1.ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணுக்கு நான்கு மால் என்னவென்றால் வடக்கு- வேடசந்தூர் வட்டம், தெற்கு- புல எண்.2222/2,3 ஏ மற்றும் 2221 , கிழக்கு – புல எண்.2219 மேற்கு புல எண். 2223 , ஆகும்.

<u>1முதல் 3 மற்றும் 16,17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சர்வேஎண் 2222/1 முழுவதும் குடியிருப்புக்களாக மட்டும் உள்ளது என்றால் சரிதான். அது அயன் சர்வேயாக உள்ளது. மேற்படி சர்வே எண் தென்புறத்தில் தென்னை மரங்கள் உள்ளது. மேற்குபுரத்தில் விவசாய நிலங்கள் உள்ளது. குடியிருப்பு பகுதிகளில் கிழமேலாக சாலையும் இருபுறத்திலும் வீடுகளும் உள்ளது. சர்வே எண். 2222/1 ல் கிழபுறத்திலும் தென்வடலாக சாலை உள்ளது, அது வேறு சர்வே எண்ணில் உள்ளது. அந்த குடியிருப்பு பகுதிகளில் மின் இணைப்பு இருந்தது, குறிப்பிட்டு தனிதனியாக வீடுகளுக்கு பட்டாக்கள் இல்லை.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவாவில் என்ன வழக்கு நடந்து வருகிறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கில் வாதிகளாக 4 பேர்களும் பிரதிவாதிகளாக 21 பேர்களும் இருப்பது குறித்து எனக்கு தெரியாது. தாவா வழக்கில் வாதிகள் புல எண் 2222/1ல் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியாது. அதன் மொத்த விஸ்தீரம் 2 ஏக்கர் 83 செண்ட் என்றால் சரிதான். அதில் வாதிகளுக்கு 87 செண்ட்டை அனுபவிப்பதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வழங்கியுள்ள அறிக்கையில் எதன் அடிப்படையில் குடியிருப்பு வாசிகளுக்கு பட்டா வழங்கப்பட்டது என்பதை சொல்லியுள்ளேனா அது குறித்து எனக்கு தெரியாது. அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள பெயர்கள் எல்லாம் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்தான் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கணக்கில் உள்ள விவரங்களை தாக்கல் செய்துள்ளேன். குறிப்பாக எதன் அடிப்படையில் அவர்கள் பெயர்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. அறிக்கையில் குடியிருப்பு காலம் தோராயமாக குறிப்பிட்டுள்ள வருடங்கள் குறிப்பிட்டு சொல்ல நான் வேலைக்கு வந்து 9 வருடங்கள் ஆகிறது. என் பதவி காலத்துக்கு முன்பு உள்ள வருடங்களில் அறிக்கையில் சொல்லியுள்ள நபர்களிடம் அவர்கள் குடியிருப்பு இருப்பது குறித்து ஏதேனும் அறிக்கை அவர்களிடம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. அறிக்கையில் குடியிருப்புகளின் நீளம் , அகலங்கள் பற்றி சொல்லவில்லை. அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள நபர்கள் பத்திரப்படி 3 செண்ட் என்றாலும் அவர்கள் அனுபவிப்பது 30 , 40 செண்ட் என அனுபவித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அறிக்கையில் சொல்லியுள்ள 28 நபர்கள் இந்த தாவா

வழக்கில் கட்டுப்பட்டவர்களா என்று எனக்கு தெரியாது. நான் வழங்கியுள்ள அறிக்கையின் படி வழக்கின் சொத்துக்களில் மேற்படி நபர்கள் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதிகளில் சிலர் கேட்டுக் கொண்டதற்காக போலியான ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழங்கியுள்ள அறிக்கையில் வட்டாட்சியரின் சீல் இல்லை என்றால் என்னுடைய அறிக்கை என்பதால் நான் கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எ -ரிஜிஸ்டர், சிட்டா நகல்களுக்கும் பிரதிவாதிகளின் 21 பெயர்களுக்கும் முரண்பாடாக உள்ளது என்றாலும் அவர்கள் பெயர்கள் இ,ல்லை என்றாலும் அது குறித்து எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.17 21:40:40 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.